

கடலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இரெ.இளம்வழுதி அவர்களின் 55ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கடலூர் மாநகர திமுக சார்பில், மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா தலைமையில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரி ராஜா ஆகியோர் முன்னிலையில் இளம்வழுதி அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியில் பழனிவேல், சுந்தரமூர்த்தி, அகஸ்டின் பிரபாகரன், எல்சா இளையராஜா, பிரசன்னா, மாவட்ட பிரதிநிதிகள் பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

### திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம் –

# அரடாப்பட்டு ஊராட்சியில் பனை விதைகள் - மரக்கன்றுகள் நடும் பணி!

## அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, அக்.25-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அரடாப்பட்டு ஊராட்சியில் நீர்நிலைகள் மற்றும் கிராமப்புற பகுதிகளில் பனை விதைகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்தார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் நேற்று (24.10.2025) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அரடாப்பட்டு ஊராட்சியில் நீர்நிலைகள் மற்றும் கிராமப்புற பகுதிகளில் பனை விதைகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர்க.தர்ப்பகராஜ், மற்றும் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் கா.கார்த்திகேயன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டின் மாநில மரமான, தமிழர்களின் வாழ்வியலோடு நெருங்கிய உறவுடைய, பராமரிப்பு இல்லாமலே காலத்துக்கும் பயன்தரும் பனை மரத்தை அழியாமல் பாதுகாக்கவும், இளைஞர்களிடம் பனையின் சிறப்பை கொண்டு செல்லும் விதமாகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, தமிழ்நாடு பசுமை இயக்கம் இணைந்து திருவண்ணாமலை மாவட்டத்தில் 10 இலட்சம் பனை விதைகள் நடும் பணி மற்றும் 10 இலட்சம் பழம்தரும் மரங்கள் நடும் பணி ஆனது நடைபெற உள்ளது.

"கற்பகத்தரு என்று சிறப்பிக்கப்படும் பனைமரம் நம் தமிழ்நாட்டு பாரம்பரிய அடையாளங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. பனை மரம் என்பது நம் தமிழ்நாட்டில் மாநில மரம் என்ற சிறப்பு அந்தஸ்தை பெற்று விளங்குகிறது. இந்தியாவிலேயே நம் தமிழ்நாட்டில் தான் பனை மரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன, பனை மரம் என்பது ஒரு சிறந்த பணப்பயிராக விளங்குகிறது. இதிலிருந்து சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட பொருட்கள் நமக்குப் பயனளிக்கும் வகையில் கிடைக்கிறது. அவற்றுள் குறிப்பாகப் பனை ஓலை, பனங்கட்டை நுங்கு, பதநீர், கள்ளு, பனங்கிழங்கு. பனம்பழம், தவுன். கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனை வெல்லம், பனை நார் போன்ற இயற்கையான பொருட்களும் நமக்குக் கிடைக்கிறது. நன்கு வளர்ந்த ஒரு பனை மரம் சுமார் நூறு ஆண்டுக்காலம் வரை ஆயுளுடன் வாழ்கிறது. இந்தப் பனை மரத்தில் சுமார் 30க்கும் மேற்பட்ட வகைகள் உண்டு. தற்காலத்தில் அதன் வகைகள் குறைந்துவிட்டது. பனை மரத்திலும் ஆண் பனை, பெண் பனை என்ற பிரிவு உண்டு. பெண் பனை மரங்களில் தான் பூ பூத்து காய் காய்க்கும். நகரத்தின் விரிவாக்கம் மற்றும் குடியிருப்புகளின் விரிவாக்கம் போன்றவற்றிற்காக எண்ணற்ற பனைமரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பனைமரம் நடுவது மிகவும் அவசியமாக கருதப்படுகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் திருவண்ணாமலை மாவட்டத்தில் 1 மாநகராட்சி, 5 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள், 18 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 842 கிராம ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகள், நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகள், பள்ளி, கல்லூரி வளாகம், நகராட்சி மற்றும் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகள், ஏரிகள், வாய்க்கால் கரையோரங்கள் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 இலட்சம் பனை விதைகள் நடும் பணி மற்றும் 10 இலட்சம் பழம்தரும் மரங்கள் நடும் பணியை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசின் நலத்திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செயலாற்றி வருகிறார். தமிழ்நாடு அரசு மக்களுக்கு தேவையான அனைத்து வகையான திட்டங்களையும் நிறைவேற்றி உள்ளது.. அந்த வகையில் தமிழ்நாட்டின் பாரம்பரிய மரமான பனைமரம் அழியத் தொடங்கியுள்ளது. இதை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மண்ணின் வளத்தை பாதுகாக்கவும் நிலத்தடி நீரை சேமிக்கவும் மாநிலம் முழுவதும் பனை மரக்கன்றுகளை நட வேண்டும் என இந்த ஆண்டில் 6 கோடி பணம் கன்றுகளை வைக்க வேண்டும் என அரசின் சார்பாக ஆணை பிறப்பித்து அதற்காக நிதியையும் ஒதுக்கினார். அந்த வகையில் திருவண்ணாமலை மாவட்டம் 842 ஊராட்சிகளை உடைய பெரிய மாவட்டம். இம்மாட்டத்தில் இந்த ஆண்டு 10 லட்சம் பணம் கன்றுகளை நட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில் இன்றைக்கு இப்பணியை திருவண்ணாமலை ஒன்றியம் அரடாப்பட்டு ஊராட்சியில் உள்ள ஏரிக்கரை பகுதியில் இத்திட்டத்தை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியானது தொடர்ந்து இந்த மாவட்டத்தில் இந்நிதியாண்டு முடிவதற்குள் 10 லட்சம் மரக்கன்றுகளை நடுவார்கள். இதன் மூலமாக திருவண்ணாமலை மாவட்டத்தின் நிலத்தடி நீரையும் மண்ணின் வளத்தையும் பாதுகாக்க முடியும் என்று மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் சுதாகர், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் டாக்டர்.ஆர்.மணி, ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் ஜி.இளங்கோ, உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர், திருவண்ணாமலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கழகத்தின் 'வேலுநாச்சியார்!'



காார்முகில் இடிமு ழக்கம்!
கனல்சிந்தும் வெடிமு ழக்கம்!
போர்முனை ஒலிமு ழக்கம்!
பொதுக்கூட்ட உரைமு ழக்கம்!
யார்நிகர்? அவர்க்கே! அந்தோ!
ஆர்த்திட மேடை யேறி
"நூர்ஜகான் பேகம்" வந்தால்
நொறுங்குமே பகைவர் கோட்டை!

அலைமோதும் கருத்து வெள்ளம்!
ஆற்றொழுக் கான பேச்சு!
வலைவீசிக் கேட்போர் தம்மை
வசப்படுத் திடுமோர் ஆற்றல்!
தலைவர்தம் இதயம் தொட்டுத்
தமிழ்த்தொண்டர் நெஞ்ச மெல்லாம்
நிலையான இடம்பி டித்த
நிகரற்ற சொல்லின் செல்வி!

திண்டோள்கள் மிக்க நூறு
தீரர்க்கு நிகர்த்த வீரம்!
பெண்டிர்க்குப் பெருமை சேர்த்த
பெருந்தகை! அன்பின் ஊற்று!
முண்டாசுக் கவிஞன் சொன்ன
முற்போக்குப் புதுமைப் பெண்! நம்
திண்டுக்கல் மண்கொ டுத்த
சீதனம்! தியாக மங்கை!

எக்கேடு கெட்டால் இங்கே
எனக்கென்ன? என்றில் லாமல்
தக்கார்தம் தலைமை யின்கீழ்
. தமிழ்நாடு விளங்க வேண்டித்
திக்கெட்டும் முரசொ லித்த
தென்பாண்டித் தமிழ்ம றத்தி!
முக்காடு போட்ட கொள்கை
முழுநிலா! எங்கள் பேகம்!

படைகூட்டி எவர்வந் தாலும்
பார்ப்போமே ஒருகை! என்பார்!
நடைபோட்டுக் களத்தில் 'வேலு
நாச்சியார்' சிலிர்த்த தைப்போல்
தடையாவும் தனது பேச்சால்
தகர்த்தவர்! அவர் யார்? என்றால்
நொடிதோறும் வந்து நிற்கும்
**"நூர்ஜகான் பேகம்"** தோற்றம்!

தொழில் அல்ல! பொதுவாழ்க் கையைத்
தொண்டென நினைத்த நல்லார்!
கழககமுப் பெரும்வி ழாவில்
'கலைஞரின் விருது' பெற்று,
விழிகளில் உவகை பொங்க
வீரமோ மனத்தில் பொங்க
மழையென அவர்பொ ழிந்த
மகிழ்வுரை மறக்கப் போமோ?

" தற்காலம் இருண்ட காலம்!
தளபதி முதல்வர் ஆகும்
பொற்காலம் மலரச் செய்வோம்!
புறப்படு வீர்கள்!" என்றே
நற்கோல உரையி னை, மா
நாட்டில்,ஈ ரோட்டில் ஆற்றிச்
சொற்கோலம் வரைந்த பேச்சின்
சுவையினை மறக்கப் போமோ?

நகைமுகம் மறக்கப் போமோ?
நடையினை மறக்கப் போமோ?
குகைவிட்டுப் பாயும் வேங்கைக்
குணத்தினை மறக்கப் போமோ?
மகளிர்தம் அணிக்கு வாய்த்த
மாணிக்கத் திருவி ளக்கு!
புகழ்வாழ்க! என்றே கண்ணீர்ப்
பூக்களால் வணங்கி நிற்போம்!

**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**





சிவகங்கை நகர் அரண்மனை வாசலில் சாலை மறியலில் ஈடுபட்ட கண்ணமங்கலத்தைச் சேர்ந்த கிராமமக்களிடம்கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் சமரச பேச்சுவார்த்தை நடத்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் ஆகியோர் உள்ளார்கள்.

# சிவகங்கையில் 2 நாட்களாக தொடர்ந்த சாலை மறியல் போராட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நடத்திய பேச்சுவார்த்தையில் வாபஸ்!

சிவகங்கை, அக்.25-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா கண்ணமங்கலத்தைச் சேர்ந்தவர் சங்கர். திருமணம் ஆகி இவரது மனைவி ஆறுமாத கர்ப்பிணியாவார். கடத்த சில தினங்களுக்கு முன்நடைபெற்ற முன்விரோதத்தால் தாய் மங்கலத்தில் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக இளையான்குடி போலீசார் வழக்கு பதிவு செய்து இதுவரை ஐந்து நபர்களை கைது செய்துள்ளனர். மேலும் குற்றவாளிகளை தேடிவருகிறார்கள். இந்த கொலை குற்றத்தில் ஈடுபட்ட மேலும் மூன்று குற்றவாளிகளை கைது செய்யக்கோரி நேற்று முன்தினம் சிவகங்கை நீதிமன்றம் மற்றும் அரண்மனை வாசலில் கடந்த இரண்டு நாட்களாக சங்கரின் உறவினர்கள் கண்ணமங்கலம் கிராமமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.இதனால் பஸ் போக்குவரத்து வேறுபாதையில் திருப்பி விடப்பட்டது. சாலை மறியல் போராட்டம் பற்றிய தகவல் கிடைத்ததும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித் திருமதி கா.பொற்கொடி, மாவட்ட எஸ்பி சிவபிரசாத் ஆகியோர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சங்கரின்தாயார், அவரது மனைவி தம்பி மற்றும் உறவினர்களுடன் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சமரச பேச்சுவார்த்தை நடத்தினார்.

நடந்த சம்பவம் துயரமானது. அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதலை கூறினார். மேலும் இது தொடர்பாக சாதி ரீதியாக யாரும் பேசக்கூடாது.

இது தனிப்பட்ட இரண்டு நபர்களுக்கும் நடைபெற்ற பிரச்சினை கொலையில் முடிவடைந்து உள்ளது. இதில் ஜாதி ரீதியாக ஏதும் நடைபெறவில்லை. தனிப் பட்ட இரண்டு பேர்களுக்கு இடையில் ஏற்பட்ட துயர் சம்பவமாகும் என்று அமைச்சர் கூறினார். மேலும் இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் விசாரித்து உரிய கைது செய்யப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்று தரப்பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினார்கள். அமைச்சர் இதுகுறித்து மாவட்ட எஸ்.பி.யிடம் கூறினால் விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பார் என்று உறுதி கூறினார்.

மேலும் தனது சொந்த நிதியாக ரூபாய் பத்து லட்சத்தை சங்கரின் குடும்பத்திற்கு அளிப்பதாக உறுதி கூறினார்.

எனவே சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடாமல் கலைந்து செல்லுமாறு அமைச்சர் கூறியதை ஏற்று கண்ணமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சாலை மறியல் போராட்டத்தை விலக்கி கொண்டார்கள். மேலும் இறந்து போன சங்கரின்உடலை பெற்றுச் சென்றார்கள்.

இதனால் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற சாலை மறியல் போராட்டம் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலையீட்டினால் முடிவடைந்தது.

சிவகங்கை நகரில் வழக்கம்போல் போக்குவரத்து இயங்கியது.

### தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிவிப்பு!

தென்காசி.அக்.25-

தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 29-10-2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளதை முன்னிட்டு சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு,சீனிவாசன்,பரமகுரு, மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன்,ராஜதுரை,புனிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழக தளபதியார் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 29-10-2025 அன்று வருகை தர உள்ளதை முன்னிட்டு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிற 29 ம் தேதி அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்றும். தொடர்ந்து 29 ம் தேதி தென்காசியில் மங்கம்மா சாலை சந்திக்கும் இடத்தில் பெட்ரோல் பங்க் அருகில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்தில் நடைபெற உள்ள அரசு நிகழ்வில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நதித்திட்ட உதவிகளை "எல்லாருக்கும் எல்லாம்"என்ற அடிப்படையில் வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.இதில் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் கோ.சுப்பையா,மாவட்ட பொருளாளர் இல.சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் மகேஸ்வரி,பராசக்தி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், கடற்கரை, அன்புக்கரசு, சேர்மதுரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, ராமச்சந்திரன், வெள்ளத்துரை,நகர செயலாளர்கள் மு.பிரகாஷ் (சங்கரன்கோவில்) அந்தோணிசாமி (புளியங்குடி கிழக்கு)நாகூர் கனி,

(புளியங்குடி மேற்கு) பேரூர் செயலாளர்கள் கே.டி.சி.குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன், மாரிமுத்து, சேது சுப்பிர மணியன் உள்பட கழகத்தினர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தொண்டர்கள் கலந்து கொண்டனர்.




திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் 29ஆம் தேதி நடைபெற உள்ள அரசு நிகழ்வில் பங்கேற்று அரசுத்துறை சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தர உள்ளதை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.